# அரையாண்டுத் தேர்வு - 2024

12 -ஆம் வகுப்பு கணினி பயன்பாடுகள்

மதிப்பெண்கள். 70 காலம். : 3.00 மணி

## பகுதி- அ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 x 1 = 15

1. கீழ்க்கண்டவற்றில் வெக்டர் பட கோப்பு வடிவம் எது?
   அ) PSD ஆ) JPEG இ) EPS ஈ) BMP
2. பெட்டிகள் வரைவதற்குப் பயன்படும் கருவி ________
   அ) Line ஆ) Ellipse இ) Rectangle ஈ) Text
3. அட்டவணையில் உள்ள வரிசைகள் _______ என அழைக்கப்படுகின்றன.
   அ) புலம் ஆ) உறவுகள் இ) பதிவுகள் ஈ) பண்புக்கூறுகள்
4. எந்த செயற்குறி "ஒத்தது" என்று அழைக்கப்படுகிறது?
   அ) = ஆ) == இ) === ஈ) <>
5. கீழ்க்கண்ட குறிமுறையின் வெளியீடு என்ன?

```
$array = array(1, 2, 3, 4, 5);
foreach ($array as $value)
{
echo $value;
}
```

   அ) 1 2 3 4 5 ஆ) 5 4 3 2 1 இ) 1 1 1 1 1 ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
6. எந்த படிவக் கட்டுப்பாடு பயனரை பல மதிப்புகளைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கிறது?
   அ) உரை உள்ளீடுகள்
   ஆ) பொத்தான்கள் இ) தேர்வு பெட்டிகள் ஈ) ரேடியோ பொத்தான்கள்
7. PHPஇல் MySQLi இணைக்க (connect) எத்தனை அளபுருக்கள் தேவைப்படுகிறது?
   அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5
8. வெவ்வேறு கருத்துகளுடன் கூடிய மக்கள் நிகழ் நிலையில் இணையும்போது தோன்றும் பல விவாதங்கள் மற்றும் தனிபட்ட தாக்குதல்கள் என்பது _______
   அ) ஹேக்கர்ஸ் ஆ) நச்சு நிரல் இ) கருத்துப் போர் ஈ) நிகழ் நிலைப் போர்
9. RFID-ன் விரிவாக்கம் அ) Radio Free identification ஆ) Real Frequency Identity
   இ) Radio Frequency indicators ஈ) Radio Frequency Identification.
10. சேவையகம் அணுகக்கூடிய தொடர்ச்சியான பகுதி எது? அ) மண்டலம்
    ஆ) களம் இ) தீர்வி ஈ) பெயர் சேவையகங்கள்
11. ஒளியிழை தரவு பரிமாற்றத்திற்கு வடங்களில் எந்த ஊடகம் பயன்படுத்தப்படுகிறது?
    அ) நுண்ணலை ஆ) அகச்சிவப்பு இ) ஒளி ஈ) ஒலி
12. Network simulator மென்பொருள் எடுத்துக்காட்டு தருக
    அ) simulator ஆ) TCL இ) Ns2 ஈ) C++
13. வெளி-புறத்திறனீட்டம் என்றால்_______
    அ) சொந்த நிறுவனத்தின் ஒரு கிளைக்குப் பணி ஒதுக்கல்.
    ஆ) புதிய ஊழியர்களுக்குப் பணி ஒதுக்கல்.
    இ) மூன்றாம் தரப்பினருக்கு உள்ளூரில் பணி ஒதுக்கல்.
    ஈ) சொந்த நாட்டிற்கு வெளியே மூன்றாம் தரப்பினருக்கு பணி ஒதுக்கல்
14. கடன் அட்டையுடன் பொருந்தாத ஒன்றை தேர்தெடுக்கவும்
    அ) வாடிக்கையாளர் ஆ) வியாபாரி
    இ) சந்தைப்படுத்தல் மேலாளர் ஈ) பெறுபவர்

15. இணைய வழி கடன் அட்டை பரிவர்த்தனைகளில் கீழ்கண்ட___ நெறிமுறை பயன்படுத்தப்படுகிறது. அ) பாதுகாப்பான மின்னணு பரிவர்த்தனை (SET) ஆ) எண்முறைக் சான்றிதழ்கள் இ) சமச்சீர் குறியீடு குறியாக்கம் ஈ) பொது குறியீடு குறியாக்கம்

## பகுதி-ஆ

எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி.
வினா எண் 24 கட்டாயமாக விடையளி. 6 x 2 = 12

16. பேஜ்மேக்கரில் புதிய பக்கங்களை எவ்வாறு செருகலாம்?.
17. ஏதேனும் இரண்டு DDL மற்றும் DML கட்டளைகளை அதன் கட்டளை அமைப்புடன் பட்டியலிடுக
18. மாறும் வலைப்பக்கம் என்றால் என்ன?.
19. switch கூற்றில் உள்ள break கூற்றின் வேலை என்ன?
20. MySQL வினவல்களுக்கு சில எடுத்துக்காட்டுகள் தருக.
21. URL என்றால் என்ன?
22. USB வடங்களின் பயன்கள் யாவை?
23. டாட்காம் குமிழி மற்றும் டாட்காம் வெடிப்பு என்றால் என்ன?
24. கீழ்க்கண்ட குறிமுறையின் வெளியீடு என்ன?

```
<?php
$a = 5; $b=10;
$c=($a +$b)*$a;
echo $c;
```

## பகுதி-இ

எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி.
வினா எண் 33 கட்டாயமாக விடையளி. 6 x 3 = 18

25. ஒலி கோப்பு வடிவங்களைப் பட்டியலிடுக.
26. MYSQL -ல் பயனருக்கு பயன்படும் ஏதேனும் 5 சிறப்பியல்புகளை பட்டியலிடு.
27. PHPஇல் செயற்கூறுகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் யாவை?
28. PHP ஐப் பயன்படுத்தி செய்யக்கூடிய பல்வேறு கோப்பு கையாளுதல் பணிகள் யாவை?
29. வளப்பகிர்வு பற்றி குறிப்பு வரைக
30. TCP / IP குறிப்பு மாதிரியில் உள்ள அடுக்குகள் யாவை?
31. திறந்த மூல வலையமைப்பு மென்பொருளின் பயன்களை விவரி
32. UN/EDIFACT பற்றி குறிப்பு வரைக.
33. 1 முதல் 10 வரை உள்ள எண்களை ஏறு வரிசையில் அச்சிட While மடக்கைப் பயன்படுத்தி PHP ஸ்கிரிப்ட் ஒன்றை எழுதுக.

## பகுதி-ஈ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5 x 5 = 25

34. அ) பல்லூடக கோப்பில் உள்ள வெவ்வேறு கோப்பு வடிவங்களை விவரிக்கவும். *(அல்லது)* ஆ) HTML படிவக் கட்டுப்பாடுகள் பற்றி விரிவாக விளக்குக.
35. அ) சட்டத்தில் உரையை வைப்பதற்கான வழிமுறைகளைக் கூறு. (அல்லது) ஆ) foreach மடக்கை எடுத்துக்காட்டுடன் விவரி..
36. அ) if ... elseif ... else கூற்றை எடுத்துக்காட்டுடன் விவரி. *(அல்லது)* ஆ) கணினி வலையமைப்பின் நன்மைகளை விளக்குக
37. அ) மின்-வணிக வர்த்தக மாதிரிகளைப் பட்டியலிட்டு ஏதேனும் நான்கை சுருக்கமாக விளக்கவும்.. *(அல்லது)* ஆ) வலையமைப்பு வடங்களின் வகைகளை விளக்குக.
38. அ) விரிவாக விளக்கவும்: ஒருங்கிணைந்த செலுத்தல் இடைமுகம். *(அல்லது)* ஆ) பல்வேறு வகையான EDI வகைகளை விளக்குக.